வகுப்பு: 8 அரையாண்டுத் தேர்வு - 2 மதிப்பெண் / வினாக்கள் - கணிதம்

1) எண்கோட்டினை வரைந்து குறிக்கவும்.. $9/4$, $\frac{-8}{3}$

2) $\frac{13}{4}$ ன் தசம வடிவத்தை எழுதவும்.

3) விகிதமுறு எண் சோடிகளை ஒப்பிடுக: $\frac{2}{3}$, $\frac{4}{5}$

4) கூடுதலைக் காண்க: $\frac{7}{5}+\frac{3}{5}$

5) $\frac{-17}{11}$ லிருந்து $\frac{-8}{44}$ கழிக்கவும்.

6) மதிப்பு காண்க (i) $\frac{-7}{27}\times\frac{24}{-35}$

7) வகுக்கவும்.. $\frac{-21}{5}\div\frac{-7}{10}$

8) $\frac{3}{4}\div\left[\frac{5}{8}+\frac{1}{2}\right]=?$

9) வர்க்கம் காண்க: 203

10) முழுவர்க்கமா? என ஆராய்க: 725

11) மதிப்பு காண்க: $\left[\frac{1}{2}\right]^3$

12) மதிப்பு காண்க: $(2^{-5}\times2^{7})\div2^{-2}$

13) அடுக்குகளைப் பயன்படுத்தி விரிவாக்கம் காண்க 897.14

14) அறிவியல் குறியீட்டில் எழுதவும் 0.000001972.

15) வட்டக்கோணப்பகுதியின் சுற்றளவு காண்க ($\pi=3.14$)
மையக்கோணம் : 45° $r=16$ செ.மீ.

16) வட்டக்கோணப்பகுதியின் பரப்பளவு காண்க.
வட்டவில்லின் நீளம் 48 மீ $r=10$ மீ.

17) ஆய்லர் சூத்திரம் சரிபார்க்க: முகங்கள் : 4 உச்சிகள் : 4 விளிம்புகள் : 6.

18) பெருக்கற்பலன் காண்க: $-x^2y\times-2xy=$ ——

19) உறுப்புகளின் பெருக்கற்பலன் காண்க: $-2mn\times(2m)^2,\times-3mn$.

20) விரிவாக்குக: $5x(2y-3)$

21) விரிவாக்குக $-2p(5p^2-3p+7)$

22) விடுபட்ட எண்ணைக் காண்க. $6xy\times$ ______ $=-12x^3y$.

23) ஒரு மகிழுந்து $(x+30)$ கி.மீ/மணி என்ற சீரான வேகத்தில் செல்கிறது.
$(y+2)$ மணி நேரத்தில் அந்த மகிழுந்து கடந்த தூரத்தைக் காண்க.
(குறிப்பு: தூரம் = வேகம் × நேரம்)

24) கோடிட்ட இடத்தை நிரப்புக: $\frac{18m^4(\_\_)}{2m^3n^3}=\_\_\_mn^5$

25) சுருக்குக: $\frac{3m^2}{m}+\frac{2m^4}{m^3}$.

26) வகுக்க: $(32y^2-8yz)\div2y$.

27) வகுக்க: $27y^3\div3y$.

www.Padasalai.Net

28) $45x^3y^2z^4 \div (-15xyz)$ (வகுக்க).

29) வகுக்க $(3xy)^2 \div 9xy$.

30) வகுக்க : $(4m^2n^3+16m^4n^2-mn) \div 2mn$.

31) தவறுகளை கண்டறிந்து சரிசெய்க : $7y^2-y^2+3y^2=10y^2$.

32) விரிவாக்குக : $(3m+5)^2$

33) $\frac{(a+b)(a^3-b^3)}{a^2-b^2}$ இன் மதிப்பு காண்க.

34) $(a-b)=3$ மற்றும் $ab=5$ எனில் a^3-b^3ன் மதிப்பு காண்க.

35) பொதுக்காரணியை வெளியே எடுத்துக் காரணிப்படுத்துக :
(i) $18xy-12yz$ (ii) $(ax+ay)+(bx+by)$

36) காரணிப்படுத்துக : $x^2+14x+49$.

37) காரணிப்படுத்துக : $x^2+yz+xy+xz$.

38) காரணிப்படுத்துக : $x^2+8x+16$.

39) தீர்க்க : $2x+5=9$

40) ஆண்டிற்கு 5% வட்டி வீதத்தில் ஓர் ஆண்டிற்கு ₹500 ஐத் தனிவட்டியாக தரும் அசல் எவ்வளவு?

41) 600 இன் x% என்பது 450 எனில் xன் மதிப்பு காண்க.

42) 400 இன் 30% மதிப்பின் 25% என்ன?

43) 48 இன் 48% = xன் 64% எனில் xன் மதிப்பு காண்க.

44) பூச்சட்டி ஒன்றை ₹528 க்கு விற்று ஒரு பெண் 20% லாபம் பெறுகிறார். 25% லாபம் பெற அவர் அதை என்ன விலைக்கு விற்கவேண்டும்?

45) 16% தள்ளுபடியில் ₹210க்கு வாங்கப்பட்ட ஒரு தொப்பியின் குறித்த விலை என்ன?

46) கூட்டுவட்டி என்றால் என்ன? (Page NO:139)

47) ₹5000 க்கு 8% ஆண்டு வட்டியில் 2 ஆண்டுகளுக்கு கூட்டுவட்டிக்கும் தனிவட்டிக்கும் இடையேயுள்ள வித்தியாசம் காண்க.

48) A என்பவர் ஒரு வேலையை 3 நாளிலும் B என்பவர் 6 நாளிலும் முடிப்பர் எனில் இருவரும் சேர்ந்து அந்த வேலையை எத்தனை நாளில் முடிப்பர்?

49) ஒரு செங்கோண முக்கோணமானது 5செ.மீ, 12செ.மீ மற்றும் 13செ.மீ ஆகிய அளவுகளைக் கொண்ட பக்கங்களை பெற்றிருக்குமா?

50) பிதாகரஸ் தேற்றத்தைப் பயன்படுத்தி கொடுக்கப்பட்ட பக்கங்கள் செங்கோண முக்கோணத்தின் பக்கமாகுமா? சரிபார்க்க : 12, 13, 15.

51) 108 முழுவர்க்க எண்ணாகுமா?

52) வட்டக்கோணப்பகுதியின் ஆரம் 21 செ.மீ மற்றும் அதன் மையக்கோணம் 120° எனில் வில்லின் நீளம் காண்க.

53) $(2x+6y)$ மற்றும் $(3x-4y)$ இவற்றை பெருக்குக.

54) தீர்க்க : $13x-7=6$.

55) முற்றொருமையைப் பயன்படுத்தி மதிப்பு காண்க : $(102)^2$ /

56) விரிவாக்குக : $(y-5)^3$.

57) ஓர் எண்ணின் மதிப்பை 25% குறைத்தால் 120 கிடைக்கிறது எனில் அந்த எண் காண்க.

58) தொடர் கழித்தல் முறை : (36, 80)